## வேர்ட்ஸ்மித் சிகரம்

**SECONDARY 4 - BEST MODEL COMPO & EMAIL WRITING PRACTISE TO JUMP GRADE**

**உயர்நிலை 4 - சிறப்புத் தேர்ச்சிக்கான தேர்வுத் தலைப்பையொட்டிய கட்டுரை & மின்னஞ்சல் மாதிரிகளோடு பயிற்சிகள்**

## பொருளடக்கம்


| எண் | தலைப்பு | கருப்பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| | தொகுதி 1 | | |
| 1 | அப்பா கைத்திறன்பேசியில் அயல் நாட்டில் இருக்கும் மகள் மேகலையிடம் உரையாடிக்கொண்டிருந்தார். திடீரென்று "அப்படியா..." என்று அதிர்ச்சிக் குரலோடு சிலையாய் நின்றார். 'அப்பா...அப்பா..' என்ற விமலின் அழைப்பிற்கும் பதில் ஏதும் இல்லை. | எந்திரனியல் - அமெரிக்கா போட்டியில் வெற்றி | 1 - 3 |
| 2 | இந்த வருட தேசிய தினத்தை நேரில் கண்டுகளித்த அறிய வாய்ப்பையும் அனுபவத்தையும் விவரித்து எழுதுக. | தேசிய தினத்தை நேரில் கண்ட அனுபவம் | 4 - 5 |
| 3 | நீயும் உன் வகுப்பு மாணவர்களும் சிறுவர் இல்லத்தில் செலவிட்ட ஒரு நாள் அனுபவத்தை விளக்கி எழுதுக. | இணைப்பாட வகுப்பு - சிறுவர் இல்லத்தில் கழித்தல் | 6 - 7 |
| தொகுதி 1 வினா 1 - 3 பயிற்சிகள் | | | 8 - 10 |
| | தொகுதி 2 | | |
| 4 | உமது பள்ளி ஏற்பாடு செய்த விடுமுறை முகாமில் கலந்துகொண்டு நீவிர் அடைந்த பயன்களையும் அதன்மூலம், நீ எவ்வாறு உம்மை மேம்படுத்திக் கொண்டாய் என்பதையும் விளக்கி எழுதுக. | தமிழ் முகாம் - புதிய அனுபவம் | 11 - 13 |
| 5 | நீ முடிவெடுக்கச் சிரமப்பட்ட ஒரு பிரச்சனை எவ்வாறு தீர்க்கப்பட்டது என்றும், அதற்காக நீ மேற்கொண்ட செயல்களையும், சந்தித்த சவால்களையும் விவரித்து எழுதுக. | நண்பர்களுடனான சுற்றுலா - பாட்டியின் வரவு | 14 - 16 |
| 6 | அண்மைய காலமாக உன் அக்காவுடன் சேர்ந்து யோகா பயிற்சிகள் செய்வதன் மூலம் நீ அடைந்துள்ள நன்மைகளை விளக்கி எழுது. | அக்காவுடன் யோகா பயிற்சி - மாற்றம் | 17 - 18 |
| தொகுதி 2 வினா 4 - 6 பயிற்சிகள் | | | 19 - 20 |

# தொகுதி 1

**<u>மாதிரிக் கட்டுரை (Model Compo) 1</u>**

**கீழ்க்காணும் வினாவில் தொடக்கவரிகளைப் பயன்படுத்தி கதையை முடித்தெழுதுக.**

**1.** ***அப்பா கைத்திறன்பேசியில் அயல் நாட்டில் இருக்கும் மகள் மேகலையிடம் உரையாடிக்கொண்டிருந்தார். திடீரென்று "அப்படியா....." என்று அதிர்ச்சிக் குரலோடு சிலையாய் நின்றார். 'அப்பா.....அப்பா.....' என்ற விமலின் அழைப்பிற்கும் பதில் ஏதும் இல்லை.***

அப்பா கைத்திறன்பேசியில் அயல் நாட்டில் இருக்கும் மகள் மேகலையிடம் உரையாடிக்கொண்டிருந்தார். திடீரென்று "அப்படியா....." என்று அதிர்ச்சிக் குரலோடு சிலையாய் நின்றார். 'அப்பா.....அப்பா.....' என்ற விமலின் அழைப்பிற்கும் பதில் ஏதும் இல்லை. அமெரிக்காவில் மருத்துவராகப் பணிப்புரியும் அக்கா மேகலை, விமல் அனைத்துலக **எந்திரனியல்** போட்டியின் அரையிறுதிச் சுற்றைக் கடந்து இறுதிச் சுற்றுக்குத் தேர்வாகியதைக் கூறியதும் அப்பாவிற்கு அதிர்ச்சியும் ஆனந்தமும் **தாளவில்லை**. "அப்பா, அப்பா என்ன ஆயிற்று?" என பதற்றத்தை அடக்க முடியாமல் அப்பாவை சுய நினைவிற்குக் கொண்டு வர விமல் **அரும்பாடுப்பட்டான்**. சில **நாழிகை**யில் சுய நினைவிற்கு வந்தவர், கூறிய செய்தியைக் கேட்டதும் விமல் *வானத்திற்கும் பூமிக்குமாய் பறந்தான்*. சிறுவயது முதலே நவீன தொழில்நுட்ப கருவிகளின் மீது இருந்த ஆர்வமும் நாட்டமும் வளர்ந்த பிறகு விமலை எந்திரனியல் துறை பக்கம் கட்டி இழுத்தது எனலாம். விமல் ஆர்வத்தோடு செய்யும் அனைத்து முயற்சிகளுக்கும் அவனது அப்பாவின் ஊக்கமும் நம்பிக்கை வார்த்தைகளும் தான் பக்கபலம். விமலின் ஆர்வத்தை சிறு வயது முதல் **உன்னிப்பாய்** கவனித்த அப்பாவிற்கு, அவனின் அடுத்த கட்ட வெற்றிப் படியை நினைக்கும் போது கண்களில் ஆனந்த கண்ணீர் உருண்டோடின.

தன் மீது முழுமையான நம்பிக்கையை வைத்திருக்கும் அப்பாவிற்கு புகழை மட்டுமே **ஈட்டி** தர வேண்டும் என்ற **வேட்கை**யில் அல்லும் பகலும் பாடுபட்டு எந்திரனியல் துறையில் தன்னை வளர்த்துக் கொண்டான் விமல். **ஆக்கப்பூர்வ**மான சிந்தனைகளின் வெளிப்பாட்டால் பல எந்திரனியல் கருவிகளைக் கண்டுபிடித்தான். இன்றைய இயந்திர உலகில் தனதுத் திறமையையும் கண்டுபிடிப்புகளையும் அக்காவின் உதவியோடு **உலகமறிய** செய்தான். அக்கா மேகலை அமெரிக்காவில் நடைப்பெறும் அனைத்துலக 'நவீன எந்திரனியல் கண்டுபிடிப்புகள் 2022' போட்டிக்கு விமலின் கண்டுபிடிப்புகளை அனுப்பி வைத்தார். 17 வயதான விமலின் கண்டுபிடிப்புகள் ஏற்பாட்டுக் குழுவினரை ஆச்சரிய கடலில் மூழ்கடித்தன. அரையிறுதிச் சுற்றில் 24 மணி நேரத்தில் விமல் உருவாக்கிய *Wireless Communication Technology Walking Stick* எனப்படும் 'கம்பியில்லா கருத்து பரிமாற்ற ஊன்றுகோல்' நீதிபதிகளால் **அங்கீகரிக்க**ப்பட்டு இறுதிச் சுற்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது.

இறுதிப் போட்டிக்கு இன்னும் ஒரு மாத காலமே எஞ்சியிருக்கும் வேளையில் தான் படைக்கவிருக்கும் படைப்புக்கான வேலைகளில் மும்முரமானான் விமல். இறுதிச் சுற்றில் எப்படியாவது அனைவரும் மூக்கின் மீது விரல் வைக்கும் அளவிலான படைப்பை வழங்க வேண்டும் என்ற எண்ண அலைகள் அவனுள் அடங்காமல் ஓடிக் கொண்டிருந்தன.

*முடிவும் இடையூறும் முற்றியாங் கெய்தும்*
*படுபயனும் பார்த்துச் செயல்*

எனும் வள்ளுவரின் பொய்யாமொழிக்கேற்ப ஒரு செயலைச் செய்யும்போது அது முடிவதற்கான முயற்சி, இடையில் வரும் தடை, முடியும்போது அடையும் பெரும் பயன் ஆகியவற்றை ஆராய்ந்து செயல்பட வேண்டும். அதுபோல விமல் தான் செய்ய **விழையும்** படைப்பிலே முழு கவனத்தையும் செலுத்தி மனதளவிலும் திறனளவிலும் திடமாக இறுதிப் போட்டிக்கு இனிதே தயாரானான். மிகுந்த ஆர்வத்துடன் அப்பாவோடு நியூ யோர்க் பயணமானான். போட்டியைப் பற்றிய அச்சத்தைக் குறைக்க அப்பா மற்றும் அக்காவின் வார்த்தைகள் அவனுக்கு **உந்துகோளாக** அமைந்தன.

போட்டி நாளும் வந்தது. வழங்கப்பட்ட 48 மணி நேரத்தில், மனிதர்களுக்குப் பயன்படும் **அதிநவீன** எந்திரனியல் சாதனம் உருவாக்க வேண்டும். பல நாட்கள் முயற்சித்து தான் உருவாக்கிய கண்பார்வையற்றோருக்கான ஆபத்துகளை அறியும் அறிவார்ந்த உணரியைக் கொண்ட கண்ணாடியை உருவாக்கினான். பல நாட்களின் பயிற்சியும் முயற்சியும் விமல் தன் படைப்பை 45 மணி நேரத்திலே செய்து முடிக்க முக்கிய காரணிகளாக அமைந்தன. '*பதறாத காரியம் சிதறாது*' என்பதற்கேற்ப பதற்றப்படாமல் பொறுமையுடன் ஒரு செயலைச் செய்தால் அச்செயல் நிச்சயம் சிறப்பாக முடிவுறும் என்பதை நினைவில் ஏற்றி உன்னிப்பாக ஒவ்வொரு அங்கங்களையும் இணைத்து தனது படைப்பையும் மிகச் சிறப்பாக முடித்தான்.

போட்டியின் முடிவுகள் மறுநாள் அறிவிக்கப்படும் என்பதால் சற்று ஓய்வெடுக்க நேரம் கிடைத்தது. தனது முழுமையான படைப்பை வழங்கிய மன நிம்மதியுடன் கண் அயர்ந்தான். மறுநாள் முடிவுகள் அறிவிக்கப்படும் தருணமும் வந்தது. விமல் மிகுந்த பொறுமையுடன் காத்துக் கொண்டிருந்தான். இறுதிப் போட்டியில் விமலின் படைப்பு இரண்டாம் இடத்தை வாகை சூடியது. அதுமட்டுமின்றி, **மாற்றுத்திறனாளி**களுக்கான கருவிகளைத் தயாரிக்கும் WeWalk என்னும் நிறுவனம் விமலின் படைப்பை தங்கள் நிறுவனத்தின் மூலம் அதிகாரப்பூர்வமாக செய்யப்பட்டு குறைந்த விலையில் விற்பனையாகும் என்றும் அறிவித்தனர். இச்செய்தியைக் கேட்ட அப்பா *உச்சிக்குளிந்தார்*. தனது குடும்பத்திற்கும் சிங்கப்பூருக்கும் விமல் ஈட்டித் தந்துள்ள புகழைப் பாராட்டும் வண்ணம் அரங்கில் இருந்த அனைவரும் எழுந்து நின்று கரகோசம் எழுப்பினர். இந்த வெற்றியும் இப்போட்டி பெற்றுத்தந்துள்ள அனுபவமும் மென்மேலும் சிறப்பாக முன்னேற படிகற்களாக அமைய வேண்டும் என்று கூறிய வண்ணம் விமலை ஆரத்தழுவினார் அப்பா.

**கட்டுரை சிறக்க உதவும் வரிகள்:**

- விடாமுயற்சி மற்றும் கடின உழைப்பு ஆகியவற்றின் குழந்தையே வெற்றி - ஒரிசன் ஸ்வெட் மார்டென்
- முயற்சி என்பது விதை போல, அதை விதைத்துக் கொண்டே இரு. முளைத்தால் மரம், இல்லையென்றால் மண்ணிற்கு உரம். - கோ. நம்மாழ்வார்
- தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
  தோன்றலின் தோன்றாமை நன்று

  பொருள்: *எந்தத் துறையில் ஈடுபட்டாலும் அதில் புகழுடன் விளங்கவேண்டும்; இயலாதவர்கள் அந்தத் துறையில் ஈடுபடாமல் இருப்பதே நல்லது.*
- முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
  இன்மை புகுத்தி விடும்

  பொருள்: *முயற்சி இல்லாமல் எதுவும் இல்லை. முயற்சிதான் சிறப்பான செயல்பாடுகளுக்குக் காரணமாக அமையும்.*
- குன்றின் மேலிட்ட விளக்கு போல

  பொருள்: *எல்லாராலும் அறியப்பட்ட ஒருவரின் திறமை*

**அருஞ்சொற்பொருள்**

| எண் | அருஞ்சொல் | பொருள் | English Meaning |
|---|---|---|---|
| 1. | எந்திரனியல் | இயந்திர பயன்பாடு | Robotics |
| 2. | தாளவில்லை | அடக்க முடியவில்லை | Can't bear |
| 3. | அரும்பாடு | கஷ்டம் | Struggle |
| 4. | நாழிகை | நொடி | Second |
| 5. | உன்னிப்பு (உன்னிப்பாய்) | கூர்மை | Closely monitored |
| 6. | ஈட்டி | தேடி | Bring |
| 7. | வேட்கை | விடாமுயற்சி | Diligence |
| 8. | ஆக்கப்பூர்வம் (ஆக்கப்பூர்வ) | திறன் | Constructive |
| 9. | உலகமறிதல் (உலகமறிய) | அனைவரும் அறிய செய்தல் | World Famous |
| 10. | அங்கீகரிப்பு (அங்கீகரிக்க) | ஏற்றுக்கொள்ளப்படுதல் | Recognition |
| 11. | விழைதல் (விழையும்) | செய்தல் | Will be done |
| 12. | உந்துகோள் (உந்துகோளாக) | தூண்டுகோல் | Motivation |
| 13. | அதிநவீனம் (அதிநவீன) | அதிக வளர்ச்சி | Modern Technology |
| 14. | அறிவார்ந்த உணரி | - | Intelligent Sensor |
| 15. | மாற்றுத்திறனாளி | உடல் ஊனமுற்றவர் | Physically Disabled |

**<u>பயிற்சி வினா 2</u>**

**கீழே உள்ள மனவரைபட குறிப்புக்கட்டுரையை (Mindmap Compo), உதவியாகப் பயன்படுத்தி, கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விக்கு நீ கட்டுரை எழுதவும்.**

**2. இந்த வருட தேசிய தினத்தை நேரில் கண்டுகளித்த அறிய வாய்ப்பையும் அனுபவத்தையும் விவரித்து எழுதுக.**

| **முன்னுரை** | **விளக்கம்** |
|---|---|
| தேசிய தினத்தைக் காண ஆசிரியர் அழைத்துச் செல்ல வாக்கு | • ஆண்டுதோறும் 9 ஆகஸ்ட் - சிங்கப்பூர் தேசிய தினம்<br>• கோலாகலக் கொண்டாட்டம் - கலந்துகொள்வதற்கு வாய்ப்பு **கிட்டியதில்லை**<br>• இம்முறை 40 மாணவர்களை ஆசிரியர் தேர்ந்தெடுத்து அழைத்துச் சென்றார்<br>• எதிர்பாராவிதமாக கிடைத்த வாய்ப்பு - மானைப் போல் துள்ளிக் குதித்தேன் |
| **கருத்து 1** | |
| பயணம் | • காலை 7 ஒன்றுச்சேர்ந்தோம் - மாணவர்கள் - **இரட்டிப்பு** ஆனந்தம்<br>• பேருந்து - நெடுந்தூரம் - தேசிய தினம் - கொண்டாடுவதன் காரணம் - ஆசிரியர் **போதனை**<br>• 9 ஆகஸ்ட் 1965 - மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் விடுதலை<br>• வருடந்தோறும் நினைவுகூறும் நாள் களைக்கட்டி கொண்டாடுகின்றனர் |
| **கருத்து 2** | |
| நிகழ்ச்சி | • மெரினா விரிகுடா - *சிட்டாய் பறத்தல்* - மக்கள் **திரளாக** - வருகை<br>• நிகழ்ச்சி - அடியிடுதல்<br>• கொவிட்-19 நோய் பரவல் சூழலில் - கடுமையான பாதுகாப்பு - முகக்கவசம் கட்டாயம்<br>• முப்படை வீரர்கள் - கம்பீர அணிவகுப்பு<br>• வானில் விமானங்கள் வட்டமடித்தன - வாய்ப்பிளந்து - இரசித்தல்<br>• **வான்குடை** மிதவையுடன் - வீரர்கள் - சிங்கை கொடியுடன் - விமானங்கள் |
| **கருத்து 3** | |
| நிகழ்ச்சியின் தொடர்ச்சி | • விருந்து படைத்த கலைநிகழ்ச்சிகள் - பாரம்பரிய நடனம்<br>• ஆயிரக்கணக்கான நடன கலைஞர்கள் - கண்களுக்கு குளிர்ச்சி<br>• **சீறொளி** நிகழ்ச்சிகள் - வண்ண வாண வேடிக்கைகள் |
| **கருத்து 4** | |
| நிகழ்ச்சியின் இரண்டாம் தொடர்ச்சி | • தேசிய நாள் பேரணி - மரினா பே மிதக்கும் மேடை - இராணுவ அணிவகுப்பு<br>• சிவப்பு வெள்ளை நிறம் - கோலாகலம்<br>• திடீரென்று கனத்த மழை - கடவுள் ஆசிர்வாதம்<br>• மாரியில் நனைந்தபடி - **அசராமல்** - தேசத்தின் பெருவிழா கொண்டாட்டம் - மக்கள் பூரிப்பு |

| முடிவுரை | |
|---|---|
| நிகழ்ச்சி நிறைவு | *“தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்<br>செல்வரும் சேர்வது நாடு”*<br>பொருள்: வெறுக்க முடியாதன விளைவதும், தகுதியான மக்களும் குறையாத செல்வம் பெற்றவரும் கூடியிருப்பது நாடு.<br>• தேசப்பற்று - *அணையா சுடராய்* - மக்களிடையே **ஜொலித்தல்**<br>• 4 மணி அளவில் - நிகழ்ச்சி - நிறைவு<br>• இதுவரை காணா காட்சி - கண்ட ஆனந்தம் - முகத்தில் நிழல்<br>• முதல் அனுபவம் - *மனதில் ஆணித்தரப் பதிவு* - நன்றி உணர்வு |

**கட்டுரை சிறக்க உதவும் வரிகள்:**

- பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
  ஆற்ற விளைவது நாடு
  பொருள்: *நிறைந்த பொருள்களை பெற வாய்ப்பளித்து, அருமையான உழைப்பால் தேவைகளை பூர்த்தி செய்வது நாடு.*
- தாய்நாட்டை நேசிக்காதவன் எதையும் நேசிக்க முடியாது - பைரன்
- நாட்டின் நன்மை கருதி வாழ்வதுதான் நாட்டுப்பற்று - ஔவையார்
- நல்ல நாட்டில் அன்பு திகழ வேண்டும் - ரஸ்ஸல்
- அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
  பொருள்: *ஒருவருடைய மனநிலையை முகம் காட்டிவிடும்.*
- அரசு இல்லாத நாடு அச்சில்லாத தேர்
  பொருள்: *அரசன் எப்படியோ அப்படியே ஊர் மக்கள் பின்பற்றுவர்.*
- அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது
  பொருள்: *தவறிவிடும் வாய்ப்புகள் திரும்ப கிடைக்காது.*

**அருஞ்சொற்பொருள்**

| எண் | அருஞ்சொல் | பொருள் | English Meaning |
|---|---|---|---|
| 1. | கிட்டியதில்லை | கிடைத்ததில்லை | Never happened |
| 2. | இரட்டிப்பு | இருமடங்கு | Double |
| 3. | போதித்தல் (போதனை) | கற்பித்தல் | Teaching |
| 4. | நினைவுக்கூறுதல் (நினைவுகூறும்) | நினைத்துப் பார்த்தல் | Reminiscent |
| 5. | திரள் (திரளாக) | கூட்டம் | Crowd |
| 6. | அடியிடுதல் | தொடங்குதல் | Begin |
| 7. | வான்குடை மிதவை | - | Parachute |
| 8. | சீரொளி | - | Laser Light |
| 9. | அசராமல் | அசையாமல் | Without Moving |
| 10. | ஜொலித்தல் | பிரகாசித்தல் | Sparkle |

**பயிற்சி வினா 3**

**கீழ்க்காணும் வினாவிற்கு உதவி குறிப்புக்கட்டுரையின் (Hint Compo) துணையோடு கட்டுரை எழுதவும்.**

**3. நீயும் உன் வகுப்பு மாணவர்களும் சிறுவர் இல்லத்தில் செலவிட்ட ஒரு நாள் அனுபவத்தை விளக்கி எழுதுக.**

**முன்னுரை**

- பள்ளி இணைப்பாட வகுப்பு - சமையல் கலை கற்றல்
- மூன்று மாதக்கால பயிற்சி
- இணைப்பாட ஆசிரியர் - திட்டப்பணி - சிறுவர் இல்லம் - கற்று கொடுத்தல்
- கற்றுக்கொண்டவற்றை சோதனை செய்யும் களமாக சிறுவர் இல்லம் அமைதல்

**இடையுரை**

- கோழி ரசம் செய்யும் முறை - கற்றுக்கொடுக்கும் வாய்ப்பு கிடைத்தது
- சமூக சேவை மட்டுமல்லாது திறன் சோதிக்கும் **தளமாக** அமைந்தது
- பயிற்சி **பிசகாமலிருக்க** - இரண்டு, மூன்று முறை இல்லத்திலேயே பயிற்சி மேற்கொள்ளுதல்
- சிறுவர் இல்லத்தை பத்திரமாக வந்தடைதல்
- சிறுவர்களின் முகத்தில் சந்தோஷம் ததும்பியது
- மானைப் போல் துள்ளிக் குதித்து வரவேற்றல்
- சிறுவர் இல்லம் சுவற்றின் **பதாகை**யில் பள்ளி பெயருடன், எங்கள் முகம் - பெருமித உணர்வு
- நிறைய சிறுவர்கள் - சிலர் முகத்தில் மகிழ்ச்சி, சிலர் முகத்தில் ஏக்கம்
- மனதை **நெருடியது** - அனைவரையும் மகிழ்ச்சியாகவும் திருப்திபடுத்தவும் எண்ணுதல்
- சிறுவர்களை குழு வாரியாகப் பிரித்தல்
- சமையலுக்கு தேவையான பொருட்களைத் தயார் செய்தல்
- ஆர்வம் பொங்க கற்றுக்கொடுக்க ஆரம்பித்தல்
- **செய்முறை** விளக்குதல் - **குறி**ப்பெடுத்தல்
- சமைப்பதை முறையாக பின்பற்றுதல்
- சிறுவர்களில் சிலர் வாயைப் பிளந்துக்கொண்டு பார்த்தல்
- ஒரு சிறுவன் கோழியைப் பானையோடு தவறுதலாக கீழே போடுதல்
- கீழே கோழி ரசத்தோடு எல்லாம் சிந்துதல் - நஷ்டம் உணவு வீண்
- செய்வதறியாது விழித்தல்
- சமாதனப்படுத்தி - மற்றொரு முறை அச்சிறுவனோடு சேர்ந்து சமைத்தல்
- மகிழ்ச்சி - சிறுவன் நன்றி கூறுதல்
- எழும் ஐயங்களைச் சரியான விடைக்கொண்டு **தெளியவைத்தல்**
- அனைவரும் சுவையான கோழி ரசம் வைத்து முடித்தல்
- வந்த காரியம் வெற்றி பெற்றதை எண்ணி உச்சிக் குளிர்தல்

**தொகுதி 1 பயிற்சி**

**கீழ்காணும் பனுவலுக்கேற்ற சொற்றொடர்களைக் கொண்டு கோடிட்ட இடத்தில் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.**

1. மேகலை சிறுவயது முதலே சுறுசுறுப்புடனும் விடாமுயற்சியுடனும் இருப்பாள். அவள் தம்பி விமலோ எப்பொழுதும் சோம்பித் திரிவான். பள்ளியில் ஆசிரியர்கள் எப்பொழுதும் விமலைக் கண்டித்துக்கொண்டிருப்பர். பலமுறை மேகலையின் பெற்றோரிடமும் முறையிட்டுள்ளனர். தன் மகனின் போக்கை எண்ணி அவன் பெற்றோர் வருந்தாத நாளில்லை. ஒரு முறை விமலன் தன் நண்பன் குமரனின் வீட்டிற்குச் சென்றான். "______________________________ இவை இரண்டும் இல்லையெனில் ஒருவன் தனது வாழ்வில் முன்னேறவே முடியாது", என்றார் குமரனிடம் அவன் தந்தை. இதைக் கேட்ட விமலனுக்குக் குறுகுறுத்தது. அன்று முதல் அவனும் தன் அக்காளைப் போன்று முயற்சியையும் உழைப்பையும் விடாது கடைப்பிடித்தான்.

2. மேகலை அமெரிக்காவில் நடைபெறும் அறிவியல் கண்டுபிடிப்புப் போட்டியில் கலந்து கொள்ள மிகவும் ஆர்வமாக இருந்தாள். சுயமாக ஓர் அறிவியல் கண்டுபிடிப்பை உருவாக்க வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தாள். நாள் நேரம் பார்க்காமல் அதற்கு அயராது உழைக்க ஆயத்தமானாள். இருப்பினும், அவளது முயற்சிகள் தோல்வியையே தழுவின. மனமுடைந்த அவள் தன் தந்தையிடம் முறையிட்டு அழுதாள். அவள் தந்தையோ ______________________________ என்ற கோ. நம்மாழ்வாரின் பொன்மொழியை மேற்கோள் காட்டி அவளை உற்சாகப்படுத்தினார். தந்தையின் வார்த்தைகள் மேகலையின் தன்னம்பிக்கையைப் புதுப்பித்தது. தனது முயற்சியைத் தொடர்ந்தாள்

3. அப்பா கைத்திறன்பேசியில் அயல் நாட்டில் இருக்கும் மேகலையிடம் உரையாடிக்கொண்டிருந்தார். திடீரென்று "அப்படியா..." என்று அதிர்ச்சிக் குரலோடு சிலையாய் நின்றார். 'அப்பா.....அப்பா.....', என்ற விமலின் அழைப்பிற்கும் பதில் ஏதுமில்லை. அமெரிக்காவில் நடக்கவிருக்கும் அறிவியல் கண்டுபிடிப்புப் போட்டிக்காக மேகலை தனது பள்ளி ஆசிரியர் மற்றும் பிற பங்கேற்பாளர்களுடன் பெற்றோரின் ஆசியுடன் புறப்பட்டாள். அங்கு உலகமெங்குமுள்ள நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டனர். போட்டியும் தொடங்கியது. தனது நெடுநாள் முயற்சியில் உருவான எந்திரத்தை உலகப்புகழ் பெற்ற அறிவியல் அறிஞர்கள் முன்னிலையில் விளக்கினாள். ______________________________ என்பதற்கேற்ப தனது விடாமுயற்சி அவளைக் கைவிடவில்லை. அங்கிருக்கும் நூற்றுக்கணக்கான போட்டியாளர்களைப் பின்தள்ளி மேகலை வெற்றிப்பெற்றாள்.

WORDSMITH BEYOND LEARNING SKILLS JUMP grades achieve BIG

4. இந்த ஆண்டு தேசிய நாள் கொண்டாட்டம் மீண்டும் கோலாகலாமாக நடைபெற்றது. பெருந்தொற்று காலத்தில் எல்லாவித கொண்டாட்டங்களும் தடைப்பட்டுப் போயிருந்தன. இந்த ஆண்டு தேசிய நாள் கொண்டாட்டத்தை நேரில் கண்டுகளிக்க எனக்கு வாய்ப்புக் கிட்டியது. எனது பள்ளி நண்பர்களுடன் நானும் சென்றிருந்தேன். என் ஆசிரியர் அடிக்கடி ______________________________ என்ற பைரனின் வார்த்தைகளை வகுப்பில் கூறுவார். அது முற்றிலும் உண்மையான வார்த்தைகள் என்பதை அங்கு நேரில் கண்டு உணர்ந்தேன். நம் நாட்டில் வசிக்கும் எல்லா இனத்தவர்களும் எந்த வேறுபாடுமின்றி ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியுடனும் தேசிய நாளைக் கொண்டாடினர். தேசியப் பண் ஒலிக்கும்போது அனைவரும் செலுத்திய மரியாதையைப் பார்க்கும்போது அவர்களின் நாட்டுப்பற்று வெள்ளிடைமலையாகத் தெரிந்தது. நாட்டின் பால் அவர்கள் கொண்ட அன்பைப் பார்க்கும்போது மெய்சிலிர்த்தேன்.

5. தேசிய நாள் கொண்டாட்டத்தின் போது திடீரென்று கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. தூரத்தில் ஒரு முதியவர் கூட்ட நெரிசலில் மாட்டி மயங்கினார். அவருடன் இருந்த தனது பேத்தி பதற்றத்தில் அழத்தொடங்கினாள். எங்கிருந்தோ ஒரு சில இளைஞர்கள் இனம் மதம் பாராமல் ஓடிவந்து அம்முதியவருக்கு முதலுதவி செய்தனர். அதுமட்டுமில்லாமல், அச்சிறுமியையும் பாதுகாப்பாகப் பார்த்துக் கொண்டனர். ______________________________ என்பது அவ்விளைஞர்களின் நடத்தையில் என் நண்பர்களும் நானும் புரிந்து கொண்டோம். சிறிது நேரத்தில், செம்பிறை சங்க உறுப்பினர்கள் வந்து அம்முதியவரை சிகிச்சை அறைக்கு அழைத்துச் சென்றனர்.

6. தொடர்ந்து, நமது நாட்டுப் பிரதமர் தேசிய நாள் கொண்டாட்டத்தில் உரையாற்றினார். அவர்தம் உரையில் நமது நாட்டின் அரசு மக்களுக்குச் செய்த, செய்கின்ற மற்றும் செய்யும் உதவிகளையும் சேவைகளையும் பற்றி கூறினார். ______________________________ என்பதற்கொப்ப ஒரு நாடு வளமாகவும் அமைதியாகவும் இருக்க அந்நாட்டின் அரசின் பங்கு அளப்பரியது என்றும் நாட்டின் நிர்வாகம் செவ்வனே நடக்க மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்றும் சுட்டிக்காட்டினார். மேலும், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதே அரசின் தலையாயக் கடமை என்றும் அவர்தம் உரையில் குறிப்பிட்டார். அன்றைய தேசிய நாள் கொண்டாட்டம் என்னுள் இருக்கும் நாட்டுப்பற்றை இன்னும் அதிகரித்தது.

7. கடந்த பள்ளி விடுமுறையில் நானும் என் வகுப்பு மாணவர்களும் பள்ளி அருகாமையிலுள்ள ஒரு சிறுவர் இல்லத்திற்குச் சென்றோம். அவ்வில்லத்தில் 13 வயதிலிருந்து 17 வயது வரையிலான சுமார் 30 மாணவர்கள் வசிக்கின்றனர். அவர்களுக்குத் தன்னம்பிக்கையும் உற்சாகத்தையும் ஊட்டுவதற்கே எங்களின் வருகையின் முதன்மை நோக்கமாக இருந்தது. ______________________________ என்பது வள்ளுவரின் வாக்கு. "நாம் கற்பதற்குரிய நூல்களை பிழையில்லாமல் கற்பதோடு கற்றதன் பின்னர் அதன்படி நடப்பதுதான் சாலச் சிறந்தது", என்று என் உரையை ஆரம்பித்தேன்.

8. “அண்ணா, நம் வாழ்க்கையில் வெற்றிப்பெற நாம், என்ன செய்ய வேண்டும்?”, என்று அங்கு இருக்கும் மாணவர்களில் ஒருவன் கேட்டான். அவனது ஆர்வம் முகத்தில் நன்கு வெளிப்பட்டது. ______________________________ அதுமட்டுமில்லாமல் விடாமுயற்சியும் ஊக்கமும் வெற்றியின் இரகசியங்கள் தான். இவையனைத்தும் நமது மூலதனம். இதைக் கடைப்பிடித்தாலே நம் வாழ்க்கை நெறியாக இருக்கும். மேலும், அவர்களுடன் நாங்கள் மதியம் உணவை உண்டு களித்தோம்; அளவளாவினோம். அந்நாள் மனத்திற்கு மிக நிறைவாக இருந்தது. மிகுந்த திருப்தியுடன் நானும் என் நண்பர்களும் வீடு திரும்பினோம்.

**கீழ்க்காணும் தெரிவுகளைக் கொண்டு மேலே கொடுக்கப்பட்டுள்ள சூழல்களுக்கு பொருத்தமான விடையின் எண்களைக் குறிப்பிடுக.**

1. முயற்சி என்பது விதை போல, அதை விதைத்துக் கொண்டே இரு. முளைத்தால் மரம் இல்லையென்றால் மண்ணிற்கு உரம்.
2. அரசு இல்லாத நாடு அச்சில்லாத தேர்
3. தாய்நாட்டை நேசிக்காதவன் எதையும் நேசிக்க முடியாது.
4. விடாமுயற்சி மற்றும் கடின உழைப்பு ஆகியவற்றின் குழந்தையே வெற்றி.
5. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்
6. நாட்டுப்பற்றை விட அதிக நெருக்கமான அன்பு வேறில்லை.
7. வெற்றியின் முதல் ரகசியம் தன்னம்பிக்கை
8. கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.



__உறவுமுறை மின்னஞ்சல் - 1__

**அறிவுரை கேட்டல் - கணினியால் படிப்பில் கவனச்சிதறல்**

**பின்வரும் பகுதியைப் படித்து, ஏற்ற விடையை மின்னஞ்சல்வழி எழுதுக.**

| File Edit View Tools Message Help | |
|---|---|
| அனுப்புநர் | : balu@outlook.com |
| பெறுநர் | : mani@outlook.com |
| தேதி | : 04/01/2016 |
| பொருள் | : அறிவுரை தேவை |

அன்புள்ள அண்ணனுக்கு

உங்கள் அன்புத் தம்பி பாலுவின் வணக்கம். நீங்கள் நலமாக இருக்கிறீர்களா? அங்கு நம் அம்மா, அப்பாவிற்கு என் அன்பு வணக்கத்தைத் தெரிவிக்கவும். இங்கு ஆஸ்திரேலியாவில் இப்போது வெயில் காலம். அதனால் மிகவும் சூடாக இருக்கிறது. சிங்கப்பூரின் வானிலை எப்படி இருக்கிறது?

அண்ணா, இங்குள்ள விடுதியில் தங்கிப் படிக்கும் நான், நன்றாகப் படித்து வருகிறேன். கடந்தமுறை நடைபெற்ற தேர்விலும் அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ளேன். ஆனால், ஒருமுறை என் நண்பர்களின் வற்புறுத்தலுக்கு இணங்கி கணினி விளையாடச் சென்றேன். அன்றிலிருந்து என் மனம் அதிகநேரம் கணினி விளையாட்டில் ஈடுபடுவதையே விரும்புகின்றது. என்னால் இப்பழக்கத்தை விட முடியவில்லை. படிக்கும் நேரம் குறைந்து இப்போது கணினியில் விளையாடும் நேரம்தான் கூடியிருக்கிறது. அதனால் வரும்தேர்வில் தேர்ச்சியடைய முடியாமல் போய்விடுமோ என்று அச்சமாக இருக்கிறது. என்னால் இதிலிருந்து மீள முடியுமா? நம் பெற்றோர்களுக்கு இது தெரிந்தால் மிகவும் வருத்தமடைவார்கள். எனவே, நான் இதிலிருந்து மீண்டு, படிப்பில் மறுபடியும் கவனம் செலுத்த நீங்கள்தான் எனக்குத் தக்க அறிவுரையும் ஆலோசனைகளையும் கூற வேண்டும்.

அன்புடன்

பாலு

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS = JUMP GRADES + achieve BIG

# உறவுமுறை மின்னஞ்சல் விடைத்தாள்

**<u>மின்னஞ்சல் 1</u>**

**உறவுமுறை மின்னஞ்சல் - அறிவுரை கேட்டல்**

அனுப்புநர் : mani@outlook.com

பெறுநர் : balu@outlook.com

பொருள் : அறிவுரை கூறுதல்

அன்புள்ள பாலு

நான் நலமாக இருக்கிறேன். இங்கு நம் அம்மா, அப்பா அனைவரும் நலம். தம்பி, நீ நன்றாகப் படிப்பது குறித்து மகிழ்ச்சியாக உள்ளது. அதே நேரத்தில் **கணினி** விளையாட்டிற்கு அடிமையாகிவிட்டதாக எழுதி இருக்கிறாய். அது எனக்கே உன்மீது சிறிது கோபத்தை ஏற்படுத்துகிறது.

விளையாட்டு ஒவ்வொருவருக்கும் அவசியமானதுதான். அது நம் உடலுக்குப் **புத்துணர்ச்சி**யையும், மனதிற்கு மகிழ்ச்சியையும் தரவல்லது. தொடர்ந்து படித்தலிலிருந்து சற்றுநேரம் கணினி விளையாட்டுகளில் ஈடுபடுவது தவறில்லை. அதற்காக எப்பொழுதும் அதிலேயே மூழ்கியிருப்பதுதான் தவறு. இக்கால இளையர்களின் வாழ்க்கை முறையில் கணினி விளையாட்டு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. எனவே, உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. நானும் சில ஆண்டுகளுக்கு முன் அவ்வாறுதான் இருந்தேன். ஆனால், காலப்போக்கில் என்னை மாற்றிக்கொண்டேன். நான் கடைப்பிடித்த சில வழிமுறைகளை உன்னிடம் பகிர்ந்துகொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தம்பி, நான் என் நண்பன் ஒருவனின் ஆலோசனைப்படி, ஒரு **<u>கால அட்டவணை</u>**யைத் தயார் செய்துகொண்டேன். அதில் கணினி விளையாட்டுகளுக்குச் சற்று நேரத்தை ஒதுக்கிக்கொண்டேன். தொடர்ந்து படித்துக்கொண்டிருக்கும் வேளைகளில் கணினி விளையாட்டுகளின் நினைப்பு வந்ததென்றால், கணினியில் சில பயனுள்ள இணையதளங்களுக்குச் சென்று அவற்றிலிருக்கும் தகவல்களைப் படிப்பேன். இது மறைமுகமாக நம் கற்றலுக்கும் வழிவகுக்கும். நூலகம்.காம் போன்ற இணையதளங்களில் உன் போன்ற இளையர்களுக்கென பற்பல தகவல்கள் குவிந்துகிடக்கின்றன.

மேலும், வேறுசில நல்ல பொழுதுபோக்குகளில் ஈடுபடுவதன் மூலமும் கணினி விளையாட்டுகளிலிருந்து உன் திசை திருப்பப்படும். ஆமாம்... உன் நண்பன் ரவி மிகச்சிறப்பாக ஓவியம் வரையக் கூடியவன் என்று என்னிடம் கூறியிருந்தாயே. நீ ஏன் ஓவியத்தில் உன் கவனத்தைச் செலுத்தக் கூடாது? நம் தமிழாசிரியர்கூட, "**<u>சித்திரமும்</u>** கைப்பழக்கம்" என்று கூறியிருந்தாரே, நினைவிருக்கிறதா அதனால் நீ கணினி விளையாட்டின் நினைவு வரும்போதெல்லாம் ஓவியத்திலும் கவனம் செலுத்தலாம், அல்லது உன் பள்ளி நண்பர்களுடன் வார்த்தை விளையாட்டு, **<u>சொற்களஞ்சிய</u>** உருவாக்கம் போன்ற விளையாட்டுகளையும் விளையாடலாம். அல்லது சிறந்த உடற்பயிற்சிகளிலும் ஈடுபடலாம்.

தம்பி! இதற்கெல்லாம் மேலாக, "மனதில் உறுதி வேண்டும்" என்று நம் மகாகவி பாரதியார் கூறியுள்ளார். எனவே, மன உறுதியுடன் நாம் இருந்தோமானால், நிச்சயம் படிப்பில் தேர்ச்சி பெற்று நம் பெற்றோருக்குப் பெருமை சேர்க்கலாம். நான் எழுதிய இந்த **ஆலோசனை**கள் உனக்குப் பயனளித்திருக்கும் என நம்புகிறேன். உன் அடுத்த மின்னஞ்சலில் உன் பழக்கத்தை மாற்றிக்கொண்ட நல்ல செய்தியை எதிர்பார்க்கிறேன்.

மீண்டும் உன் மின்னஞ்சலுக்காக காத்திருக்கிறேன்.

அன்புடன் உன் அண்ணன்

மணி

**அருஞ்சொற்பொருள்**

| எண் | அருஞ்சொல் | பொருள் | English Meaning |
|---|---|---|---|
| 1. | புத்துணர்ச்சி | உற்சாகம் | Energetic |
| 2. | கால அட்டவணை | நேரத் திட்ட அட்டவணை | Time table |
| 3. | சித்திரம் (சித்திரமும்) | ஓவியம் | Drawing |
| 4. | சொற்களஞ்சியம் (சொற்களஞ்சிய) | - | Vocabulary |
| 5. | ஆலோசனை | அறிவுரை | Advice |

**மின்னஞ்சல் 2**

**உறவுமுறை மின்னஞ்சல் - ஆலோசனை கேட்டல்**

அனுப்புநர் : mukunth@outlook.com

பெறுநர் : murali@outlook.com

பொருள் : ஆலோசனை கூறல்

அன்புள்ள முரளி

உன் மின்னஞ்சலைக் கண்டேன். இங்கு நானும் என் டாமியும் மிக்க நலமாக உள்ளோம்.

நீ கூறியது போல் இம்முறையும் பல்வேறு **சாகசங்களைச்** செய்துகாட்டியமைக்காக என் டாமிக்கு 'சாதனைத் தீரன்' என்ற விருதும், மற்றும் ரொக்கப் பரிசாக ஆயிரம் வெள்ளியையும் வழங்கினார்கள். எனக்கு நீ கூறியதுபோல் அளவற்ற மகிழ்ச்சி.

அது சரி. செல்லப் பிராணி வளர்ப்புபற்றிக் கேட்டிருந்தாய். வீட்டில் உள்ள சிறுவர்கள் முதல் பெரியவர்கள்வரை செல்லப்பிராணிகளை வளர்க்கலாம். அவை பொதுவாக உதவும் தன்மை, அன்பு போன்ற குணங்களைப் பெற்றிருக்கும். அதை வளர்ப்பது குறித்து பயப்படத் தேவையில்லை. ஆனால், அவற்றை வளர்ப்பதற்குத் தேவையானவற்றை முறைப்படி செய்யத் தவறக்கூடாது. அதாவது, அவற்றுக்கு வேளா வேளை உணவளித்தல், அனுதினமும் குளிப்பாட்டித் தூய்மை செய்தல், அவை நோய்வாய்ப்பட்டால் கால்நடை மருத்துவரிடம் அழைத்துச் செல்லுதல் முதலியனவற்றில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

WORDSMITH BEYOND LEARNING
GO SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG